பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

# தென்னைப் பயிர்ச்செய்கை சபை

# பதவி வெற்றிடங்கள்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. பதவி: சட்ட அதிகாரி (மா.தெ.தோ.) (MM 1-1)

**சேவை இடம் : தலைமை அலுவலகம்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

சட்டம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அல்லது**

இலங்கை சட்டக் கல்லூரியில் தொழில்சார் தகைமையைப் பெற்ற அரச சட்டத்தரணியாகவிருத்தல்

**மற்றும்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஒரு (1) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**சம்பள வகுதி:** MM 1-1

**சம்பள அளவு:** ரூபா 91,690/-(2,480x10) (3,450x15) 168,240/-

01/2025 சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் கொடுப்பனவு செய்யும் விதம்

| 2026-01-01ஆம் திகதியில் | 2027-01-01ஆம் திகதியில் |
|---|---|
| ரூபா 81,710/- | ரூபா 91,690/- |

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 2. பதவி: வெளிக்கள அதிகாரி (மா.தெ.தோ.) (MA 2-3)

**சேவை இடம்: நாடு முழுவதும்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்கள்

**அத்துடன்**

விவசாயம் / பெருந்தோட்ட முகாமைத்துவம் / விவசாய வியாபார முகாமைத்துவ பாடம் சகிதம் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழில் சார்ந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (N.V.Q) ஐந்தாம் (05) மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

பதவிக்கான விசேடத்துவ ஏனைய தகைமைகள்

- மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் செலுத்துதல் தொடர்பான செல்லுபடியாகும் சாரதி உரிமம்.
- கணனிப் பயன்பாட்டு இயலுமையைப் பெற்றிருத்தல்
- தாய் மொழியைத் தவிர ஏனைய மொழிகளில் அறிவைப் பெற்றிருத்தல்.

**சம்பள வகுதி:** MA 2-3

**சம்பள அளவு:** ரூபா 52,700/ - (800x10) (1,190x11) (1,320x10) (1,350x10) 100,490/-

01/2025 சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் கொடுப்பனவு செய்யும் விதம்

| 2026-01-01ஆம் திகதியில் | 2027-01-01ஆம் திகதியில் |
|---|---|
| ரூபா 48,784/- | ரூபா 52,700/- |

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளவாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 3. பதவி: முகாமைத்துவ உதவியாளர் (மா.தெ.தோ.) (MA 1-1)

**சேவை இடம்: நாடு முழுவதும்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில்,

i. சிங்களம் / தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி

எனும் பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்குரித்தான ஏனைய விசேடத்துவ தகைமைகள்:

Ms.Office பயன்பாடு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் N.V.Q 4 மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**சம்பள வகுதி:** MA 1-1

**சம்பள அளவு:** ரூபா 46,220/- (540x10) (630x7) (890x4) (1,190x20) 83,390/-

01/2025 சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் கொடுப்பனவு செய்யும் விதம்

| 2026-01-01ஆம் திகதியில் | 2027-01-01ஆம் திகதியில் |
|---|---|
| ரூபா 43,312/- | ரூபா 46,220/- |

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

ஆரம்பநிலை (PL-3) திறன் சார்ந்த சேவைக்குரித்தான பதவிகள்

## 4. பதவி: வெளிக்கள உதவியாளர் (மா.தெ.தோ.) (PL-3)

**சேவை இடம்: நாடு முழுவதும்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ள வகையில் தேசிய தொழிற்றிறனில் (N.V.Q) நான்காம் (04) மட்டத்தில் குறித்த துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

## 5. பதவி: பெக்கோ இயந்திர இயக்குநர் (மா.தெ.தோ.) (PL-3)

**சேவை இடம்: நாடு முழுவதும்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் செலுத்துவதற்கான மோட்டார் வாகனம் செலுத்தும் செல்லுபடியாகும் சாரதி உரிமம் மற்றும் பெக்கோ இயந்திரத்தை இயக்குவதற்கான தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

N.V.Q 4 மட்டத்தில் பெக்கோ இயந்திரத்தை இயக்குவதற்கான தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

## 6. பதவி: சாரதி (மா.தெ.தோ.) (PL-3)

**சேவை இடம்: நாடு முழுவதும்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் செலுத்துவதற்கான மோட்டார் வாகனம் செலுத்தும் செல்லுபடியாகும் சாரதி உரிமம் மற்றும் முச்சக்கர வண்டி, டிராக்டர் செலுத்துவதற்கான செல்லுபடியாகும் உரிமத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள வகுதி:** (PL-3)

**சம்பள அளவு:** ரூபா 43,280/- (10x490) (10x540) (10x590) (12x630) 67,040/-)

01/2025 சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் கொடுப்பனவு செய்யும் விதம்

| 2026-01-01ஆம் திகதியில் | 2027-01-01ஆம் திகதியில் |
|---|---|
| ரூபா 40,834/- | ரூபா 43,280/- |

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

- மேற்கூறிய பதவிகளுக்கு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக 17,800.00 ரூபா உட்பட அரசாங்கத்தின் ஏனைய கொடுப்பனவுகள்

**ஆட்சேர்க்கும் முறை:**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் பத்திரிகை விளம்பரம் அல்லது பகிரங்க அறிவித்தலின் மூலம் விண்ணப்பம் கோரப்பட்டு எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர்.

**ஏனைய நிபந்தனைகள்**

**சகல விண்ணப்பதாரர்களும்,**

I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல், உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவங்கள்**

- இதன் பிரகாரம் 2026-11-13ஆம் திகதியில் இயைபுடைய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் இணையதளத்தில் உள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் அல்லது தம்மால் தயாரித்துக்கொண்ட மாதிரியைப் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டும். அதேபோல் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி அத்தகைமைகளை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் தற்போது அரச/ கூட்டுத்தபான / சபைகளில் சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் வீதம் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- அதேபோல் இந்த நேர்முகத் தேர்வு தொடர்பில் உங்களால் ஏதும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அது பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான தகுதியின்மையாகக் கவனத்திற் கொள்ளப்படும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.
- அனைத்து விண்ணப்பங்களும் 2026-11-13ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், தென்னை பயிர்ச்செய்கைச் சபை, இல. **9/428,** டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிப்படாத ஏதாவது விடயங்கள் உள்ளதாயின் அது குறித்து ஆட்சேர்க்கும் அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். இப்பதவிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட விசாரணைகள் இதற்கான தகுதியீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**தென்னை பயிர்ச்செய்கைச் சபை,**
**இல. 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல**

மேற்கூறிய பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை பின்வரும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது. அதேபோல் அவ்வாறு பதிவிறக்கம் செய்துகொள்வதற்கு ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்பட்டால் தம்மாலேயே தயாரித்துக்கொண்ட மாதிரியைப் பயன்படுத்தி விண்ணப்பத்தை அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.

**https://coconutsrilanka.lk/**